**முதன்மை சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி.**

முன்னிலை: திரு.த.ராஜகுமார், எம்.ஏ., எல்.எல்.எம்.,
முதன்மை சார்பு நீதிபதி, திருநெல்வேலி

_2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ம் நாள் வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆடி மாதம் 22 ம் நாள்)

**அசல் வழக்கு எண். 155/2022**
(CNR No. TNTL 05 000573 2022

பிளாரன்ஸ்

. . . வாதி

/எதிர்/

1. சாலமோன் செல்வபாண்டியன்
2. சாமுவேல் பாண்டியன்
3. ஸ்டீபன் பால்பாண்டியன்
4. கான்ஸ்டைன்

. . . பிரதிவாதிகள்

**(பிராதானது வ.வி.எண்.10/2026 ல் 11.03.2026 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன் 05.08.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், 1 வது பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜோ.குணசீலன்முத்தையா அவர்கள் ஆஜராகியும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் அழைப்பாணையை பெற்றும் அவர்கள் ஆஜராகாததால் அவர்கள் இந்த வழக்கினை பொறுத்த வரையில் ஒருதரப்பு நிலை உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையிலும், 4 வது பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பி.கமலநாதன் அவர்கள் மூலம் ஆஜரான போதிலும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் அவரும் இந்த வழக்கினை பொறுத்த வரையில் ஒரு தரப்பு நிலை உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி மற்றும் 1 ம் பிரதிவாதி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட வாதவுரையை கேட்டறிந்து, வழக்காவணங்களைப் பார்வையிட்டு, இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் வைத்திருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . .

## தீர்ப்புரை

**1)** இந்த வழக்கானது வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கெதிராக பிராது தபசில் சொத்துக்களில் வாதிக்கு 1/5 பாகம் கிடைக்கத்தக்கது என்று பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க பரிகாரம் வேண்டி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) சீர்திருத்த பிராதின் சுருக்கம்**

பிராது தபசில் சொத்துக்களானது வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் முத்தையா பாண்டியன் என்பவருக்கு 22.10.1992, 26,10.1992, 30.09.2013, ஆகிய தேதிகளிட்ட கிரைய ஆவணங்களின் மூலமாகவும், 09.06.2011 ம் தேதியிட்ட பாக உடன்படிக்கை ஆவணத்தின் மூலமாகவும், பட்டா எண்கள் 981, 2280, ஆகிய பட்டாக்கள் மூலமாகவும் பாத்தியப்பட்டவைகள் ஆகும். முத்தையா பாண்டியன் பிராதில் தபசில் சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் உபய வாதிகளை வாரிசுகளாக வைத்துவிட்டு 17.04.2017 ம் தேதியில் இறந்துவிட்டார். அதன்பிறகு பிராது தபசில் சொத்துக்கள் உபய வாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது. வாதி 27.01.2022 ம் தேதியில் பிராது தபசில் சொத்துக்களை பாகம்பிரித்து தர பிரதிவாதிகளிடம் கேட்டார். ஆனால் அவர்கள் வாதியின் 1/5 பாகத்தை பிரித்து தராது வாதியின் பங்கையும் சேர்த்து வேறு 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சித்து வருகிறார்கள். ஆகவே இந்த வழக்கு எழுந்தது. ஆகவே சீர்திருத்த பிராது படி தீர்ப்பாக வேண்டும்.

3) 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் அழைப்பாணையை பெற்றும் அவர்கள் ஆஜராகாததால் அவர்கள் இந்த வழக்கினை பொறுத்த வரையில் ஒருதரப்பு நிலை உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். 4 வது பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜரான போதிலும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் அவரும் இந்த வழக்கினை பொறுத்த வரையில் ஒரு தரப்பு நிலை உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

**4)1ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையின் சுருக்கம்**

பிராதில் கண்ட அனைத்து சங்கதிகளும் உண்மையானது அல்ல. இந்த வழக்கு உரிய காலவரையறைக்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின் படி செல்லா நிலையது ஆகும். இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை. இந்த வழக்கில் சேர்க்கப்பட கூடிய அவசியமான கட்சிகாரர்களும், அவசியமான சொத்துக்களும் சரிவர சேர்க்கப்படவில்லை. வாதி, பிரதிவாதிகளிடம் பாகம் கேட்டதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதியை தான் சாரும். வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்த போது ரூ.4,38,000/- மற்றும் அனைத்து வருமானங்களையும், 1ம் பிரதிவாதியை தவிர, 2 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்பது தான் உண்மை ஆகும். தாவா சொத்துக்கள் முழுவதும் வாதி, பிரதிவாதிகளின் தந்தையின் உழைப்பால் வாங்கப்பட்டவைகள் ஆகும். 1ம் பிரதிவாதி உடல் நலம் குன்றி சிகிச்சை பெற்று வருகிறார். எனவே இந்த வழக்கில் உரிய தீர்ப்பை பகரலாம்.

5) **உபய வாதிகளின் வாதுரைகள் மற்றும் வழக்காவணங்களின் அடிப்படையில் இந்த நீதிமன்றம் கடந்த 04.06.2025 ம் தேதியில் கீழ்க்காணும் வழக்கெழுவினாக்களை வனைந்துள்ளது.**

1. இத்தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?
2. வாதிக்கு பிராதில் கோரியவாறு பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து 1/5 பாகம் கிடைக்கத்தக்கதா?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் யாது மற்றும் செலவுத் தொகை பற்றிய உத்தரவு என்ன?

**6) வாதி தரப்பு சாட்சியும், சான்றாவணங்களும்**

வாதி தரப்பில், வாதி திருமதி.பிளாரன்ஸ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் 15 குறியீடு செய்யப்பட்டுள்ளது

**7)** பிரதிவாதிகள் தரப்பில், எச்சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை, எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை .

8) **<u>வழக்கெழுவினா எண்கள் 1 முதல் 3 க்கு தீர்வு</u>**

வா.சா.ஆ.1 ஆனது 22.10.1992ம் தேதியிட்ட முத்தையா பாண்டியன் பெயரிலான கிரைய ஆவணமாக உள்ளது. அதன் படி உக்கிரன் கோட்டை அ.பு.பு.எண் 237/2–ஏ, 32 செண்ட் அ.பு.பு.எண் 237/2–பி–32 செண்டில் தென்புறம் 30 செண்டும் ஆக 62 செண்டும், கிணறும், மரங்களும் என சொல்லப்பட்டுள்ளது.

9) மேற்படி வா.சா.ஆ.1ல் கண்ட சொத்துக்கள் சீர்திருத்த பிராது 1ம் தபசில் 2ம்இன சொத்தாக சொல்லப்பட்டுள்ளது.

10) வா.சா.ஆ.2 ஆனது 26.10.1992ம் தேதியிட்ட முத்தையா பாண்டியன் பெயரிலான கிரைய ஆவணமாக உள்ளது. அதன் படி உக்கிரன் கோட்டை கிராமம் அ.பு.பு.எண்.237/2பி– 32 செண்டில் வடக்கோரம் 2 செண்டும் அதில் கட்டப்பட்ட கதவு எண்.45 கொண்ட மட்டப்பா வீடும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

11) மேற்படி வா.சா.ஆ.2ல் கண்ட சொத்தானது பிராது 1ம் தபசில் 1ம் இன சொத்தாகும்.

12) வா.சா.ஆ.3 ஆனது 09.06.2011ம் தேதியிட்ட பாக உடன்படிக்கை தஸ்தாவேஜாக உள்ளது. அதன்படி அந்த ஆவணத்தில் கண்ட 1ம் தபசில் சொத்தான உக்கிரன் கோட்டை கிராமம், நத்தம் புல எண் 671/14ல் கண்ட கதவு எண் 1/10ல் கண்ட வீடு, புல எண் 668/15 , 668/14 ல் கண்ட மொத்தம் 142.48 சதுரமீட்டர் கொண்ட நிலத்தில் மேல் பாதி 71.24 ச.மீ. கொண்ட சீர்திருத்த பிராது 4ம் தபசிலில் கண்ட 1, 2 இனச்சொத்துக்கள் முத்தையா பாண்டியனுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

13) வா.சா.ஆ.4 ஆனது 30.09.2013ம் தேதியிட்ட முத்தையா பாண்டியன் பெயரிலான கிரைய ஆவணமாக உள்ளது. அதன்படி புல எண் 668/15ல் கண்ட 142.48 சதுரமீட்டர் பரப்பளவிலான சொத்தில் கீழ்பாதி 71.24 ச.மீ. சொத்து முத்தையா பாண்டியனுக்கு கிரையமாக கிடைக்க பெற்றுள்ளது. அது சீர்திருத்த பிராது 5ம் தபசில் சொத்தாகும்.

14) வா.சா.ஆ.5ல் கண்ட புல எண்கள் 137/2–ஏ, 137/2–பி ஆகியவைகள் சீர்திருத்த பிராது 2ம் தபசில் சொத்தாக உள்ளது. அதற்கு முத்தையா பாண்டியன் பெயரில் பட்டா எண் 981ல் மானூர் வட்டம், வாகைக்குளம் வருவாய் கிராமத்தில் பட்டா உள்ளது,

15) வா.சா.ஆ.6 ஆனது மானூர் வட்டம், உக்கிரன்கோட்டை கிராமம், பட்டா எண் 2280ல் கண்ட புல எண்458/1ல் கண்ட 25.50 ஏர்ஸ் பரப்பளவிலான பிராது 3ம் தபசில் சொத்தில் 1/9 பாகம் முத்தையா பாண்டியனுக்கு உள்ளது என்ற விபரம் அடங்கிய கணினி பட்டாவாக அது உள்ளது.

16) வா.சா.ஆ.8 கொடிவழி ஜாபிதாவை குறித்து உபயவாதிகள் எவரும் மறுக்கவில்லை. தரப்பினர்கள் கிறிஸ்தவர்கள் என பிராதில் கண்டுள்ளது.

17) எனவே வா.சா.ஆ.1 முதல் 6 ஆவணங்களின் அடிப்படையில் பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிக்கு 1/5 பாகம் கிடைக்கத்தக்கது ஆகும்.

18) பாகப்பிரிவினை வழக்குகளை பொறுத்த வரையில் காலவரையறை சட்டம் கண்டிப்பாக பொருந்தக்கூடியதல்ல. 2022ம் ஆண்டில் தான் பாகம் பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதென பிராதில் சொல்லப்பட்டுள்ளதை 1ம் பிரதிவாதி உட்பட பிரதிவாதிகள் எவரும் மறுக்கவில்லை. இந்த வழக்கு 2022ம் ஆண்டிலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கு உரிய காலவறையறைக்குள் இந்நீதிமன்றத்திற்குள் வந்துள்ளது.

19) ஆகவே வாதி முத்தையாபாண்டியனின் ஒரு வாரிசு என்ற நிலையில், வாதிக்கு பிராது தபசில் சொத்துக்களில் 1/5 பாகம் கிடைக்கத்தக்கதாகும்.

20) எனவே இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்றும், இந்த வழக்கில் வாதி கோரியப்படியான சீர்திருத்த பிராது தபசில் சொத்துக்களில் 1/5 பாகம் கிடைக்கத்தக்கது என்றும், இந்த வழக்கில் இதர பரிகாரம் யாதும் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், இந்த வழக்கின் செலவுத் தொகையை உபய வாதிகள் அவர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு அவரவர்களே பொறுத்து

கொள்ள வேண்டும் என்று இந்த வழக்கெழுவினா எண்கள் 1 முதல் 3க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**21). முடிவு:–**

முடிவில் சீர்திருத்த பிராது தபசில் சொத்துக்களில் வாதிக்கு 1/5 பாகம் உண்டு என்று பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை பரிகாரம் வாதிக்கு வழங்கப்படுகிறது. இவ்வழக்கின் தன்மை சூழ்நிலையை மற்றும் தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு உபய வாதிகளின் செலவுத் தொகையை அவரவர்களே பொறுத்த கொள்ள வேண்டும்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07–ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMAR T

upload date 11.08.2026
Digitally signed by RAJAKUMAR T
Date: 2026.08.11 12:13:03 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருநெல்வேலி

**1) வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி :–**

(1) வா.சா.1– திருமதி.பிளாரன்ஸ் ( வாதி)

**2) வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 22.10.1992 முத்தையா பாண்டியன் பெயரிலான கிரைய ஆவணம் ( இணைய வழி நகல்) (ஆவண எண் 1888/1992) |
| 2 | வா.சா.ஆ.2 | 26.10.1992 முத்தையா பாண்டியன் பெயரிலான கிரைய ஆவணம் ( இணைய வழி நகல்) (ஆவண எண் 1892/1992) |
| 3 | வா.சா.ஆ. 3 | 09.06.2011 பாக உடன்படிக்கை ஆவணம் ( இணைய வழி நகல்) (ஆவண எண் 4345/2011) |
| 4 | வா.சா.ஆ. 4 | 30.09.2013 – முத்தையா பாண்டியன் பெயரிலான கிரய ஆவணம் – இணைய வழி நகல் (ஆவண எண் 5372/2013) |
| 5 | வா.சா.ஆ. 5 | கணினி பட்டா (பட்டா எண் 981) |

| | | |
|---|---|---|
| 6 | வா.சா.ஆ. 6 | கணினி பட்டா (பட்டா எண் 2280) |
| 7 | வா.சா.ஆ. 7 | வாதியின் ஆதார் அடையாள அட்டை – ஒளி நகல் |
| 8 | வா.சா.ஆ. 8 | கொடி வழி ஜாபிதா (வாதியின் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது) |
| 9 | வா.சா.ஆ. 9 | வாதிக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் வேலை செய்வதற்கு வழங்கப்பட்ட வேலை அடையாள அட்டை – ஒளி நகல் |
| 10 | வா.சா.ஆ. 10 | வாதியின் நிரந்தர வருமான வரி கணக்கு அட்டை – ஒளி நகல் |
| 11 | வா.சா.ஆ. 11 | 26.02.2010– வா.சா.1 ன் பள்ளி சான்றிதழ் – அசல் |
| 12 | வா.சா.ஆ. 12 | வா.சா.1 ன் திருமண சான்றிதழ் – எடுகுறிப்பு நகல் |
| 13 | வா.சா.ஆ.13 | வாதியின் திருமண பத்திரிக்கை – அசல் |
| 14 | வா.சா.ஆ.14 | வாதியின் மகனின் திருமண பத்திரிக்கை – அசல் |
| 15 | வா.சா.ஆ.15 | வாரிசுரிமை சான்றிதழ் – உண்மை நகல் |

<u>3) பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :–</u> இல்லை

<u>4) பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் :– இல்லை</u>

upload date 11.08.2026
RAJAKUMAR T
Digitally signed by RAJAKUMAR T
Date: 2026.08.11 12:13:10 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை சார்பு நீதிமன்றம்,

திருநெல்வேலி

அசல் வழக்கு எண். 155/2022

வரைவு/ நேரிய தீர்ப்புரை

நாள் 07.08.2026